**உடுநுவர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மே 22 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுலை 10 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 17 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணத்தால், 2019 திசெம்பர் 31 இல் உடுநுவர பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீடு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 காணி மற்றும் கட்டிட உருப்படிகளின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்கிறேன். |
| (ஆ) | ரூபா 384,350 பெறுமதியான 29 காணி மற்றும் கட்டிட உருப்படிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்கிறேன். |
| (இ) | முறையாக சபைக்கு ஒப்படைத்திருக்காத ரூபா 6,221,373 பெறுமதியான கம்பெக்டரினை சொத்தொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்கிறேன். |
| (ஈ) | ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 134,282 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்கிறேன். |
| (உ) | 04 வேலைகளிற்காக செலுத்த வேண்டிய ரூபா 236,912 கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | வெளி ஒதுக்கீட்டின் கீழ் நிறைவேற்றப்பட்ட 06 வேலைகளிற்குரிய தடுத்து வைப்புப் பணம் ரூபா 532,100 கடன்படுனராக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்கிறேன். |
| (எ) | நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுனர் கொடுப்பனவு ரூபா 266,751 கூடுதலாக இனங்காணப்பட்டிருந்தது. | கடன்கொடுனர் கொடுப்பனவு சரியாக இனங்காணப்பட வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்கிறேன். |
| (ஏ) | நிலையான வைப்பு வட்டி ரூபா 636,805 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வட்டி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்கிறேன். |
| (ஐ) | கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 945,075 கணக்குகளில் காட்டப்படவில்லை. | கிடைக்க வேண்டிய பணம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்கிறேன். |

**1.3.2 எதிர்பாராத பொறுப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை வங்கியினால் அறவிடப்பட்ட ரூபா 146,754 ஆன தடுப்பு வைப்பு வரி கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | தேவையான தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 10 கணக்கு விடயங்களிற்குரிய கணக்குகளின் பிரகாரம் பெறுமதிகள் மற்றும் துணைப்பதிவேடுகள் பிரகாரம், பெறுமதிகளிற்கிடையில் ரூபா 18,113,176 ஆன இனங்காமை நிலவின. | வித்தியாசத்தை இனங்கண்டு சரி செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்கிறேன். |

**1.3.4 தொங்கல் கணக்குகள்**

2019 ஜனவரி 01 திகதி தொங்கல் கணக்கில் ரூபா 8,995,776 ஆன செலவு மீதி நிலவியதுடன், இப் பெறுமதி திரண்ட நிதிக்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 ஜர்னல் குறிப்புகள் மூலம் தொங்கல் கணக்கிற்கு வரவு மற்றும் செலவாக குறிப்பிடப்பட்ட ரூபா 56,163,513 பெறுமதிக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தொங்கல் கணக்கை சீர் செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | ரூபா 4,769,685 ஆன தொங்கல் கணக்கு மீதி நிதி நிலைமை கூற்றில் குறிப்பிடப்படவில்லை. | தொங்கல் கணக்கை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய கணக்குகள் | | |
| | 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 8,987,411 ஆனதுடன், 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகற்கும் இடையிலான காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 9,377,110 ஆக இருந்தது. | பெற வேண்டிய பணத்தை அறவிட வேண்டும். | கடிதம் அனுப்பி அறிவூட்டப்பட்டுள்ளது டன், எதிர் காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | செலுத்த வேண்டிய கணக்குகள் | | |
| | 01 ஆண்டு காலத்தை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,985,475 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். | பொது வழங்குனர் கடன்கொடுனர் தவிர ஏனைய பணம் செலுத்தப்பட்டுள்ளது. |

**1.3.6 கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகளின்மை**

(அ) தகவல்கள் சமர்ப்பிக்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு ரூபா 15,686,985 ஆன வேலை கடன்படுனர் மீதி தொடர்பாக எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தேவையான தகவல்களை சரியாக பேணிச் செல்ல வேண்டும். | மீதிகளை இனங்கண்டு எதிர் காலத்தில் சீர்செய்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கூட்டுத் தொகை ரூபா 26,158,843 ஆன 5 கணக்கு விடயங்களிற்காக தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தேவையான தகவல்களை சரியாக பேணிச் செல்ல வேண்டும். | மீதிகளை இனங்கண்டு எதிர் காலத்தில் சீர்செய்கிறேன். |

(ஆ) கொடுப்கனவு வவுசர்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 482,692 பெறுமதியான 16 கொடுப்பனவு வவுசர்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கொடுக்கல் வாங்கல்களிற்கான கொடுப்பனவு வவுசர்களை சீராக பேண வேண்டும். | எதிர் காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.3.7 இணங்காமை**

**1.3.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| | 2015 ஜுலை 14 திகதிய 03/2015 இலக்க பொது நிதி சுற்றறிக்கை பிரகாரம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371 | ரூபா 45,000 பெறுமதியான முற்பணம் 04 மாதங்கள் முதல் 10 மாதங்கள் வரையான காலமொன்று கையிறுப்பில் காணப்பட்டது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | முற்பண கணக்கு பொறுப்பு உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர். |
| (ஆ) | ஏனைய சுற்றறிக்கை | | | |
| (i) | 2016 மார்ச் 17 திகதிய மத்திய மாகாண, உள்ளுராட்சி ஆணையாளரின் 2016/03 இலக்க சுற்றறிக்கை | | | |
| | • 05 பிரிவு | தவுலகல மற்றும் கெலிஓயவில் 29 கடையறைகளின் வாடகை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் கடையறை வாடகை திருத்தப்பட வேண்டும். | திருத்தத்திற்கான தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| • | 06 பிரிவு | தவுலகல வியாபார கட்டிடத் தொகுதி தொடர்பாக 2011 ஆண்டு மதிப்பீட்டை உள்ளடக்கி புதிய உடன்படிக்கைகளிற்கு கைச்சாத்திடப்பட்டிருக் கவில்லை. | புதிய உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | 1992 பெப்ரவரி 26 திகதிய நகர அபிவிருத்தி அதிகார பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 05/01/119 பாகம் ix இன் (I) பிரிவு | 02 மணித்தியாலங்கள் பூர்த்தி செய்யப்படாத மற்றும் திட்டமிடல் குழுவிற்கு சமுகமளித்ததாக உறுதிப்படுத்தப்படாத அலுவலர்களுக்கு ரூபா 84,400 தொகை திட்டமிடல் குழு கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | சரியான முறைப்படி படிகள் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | எதிர் காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.3.8 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அங்கீகாரமின்றி ரூபா 1,893,000 தொகை பொது வழங்கல் கடன்கொடுனராக இனங்காணப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரத்தின் கீழ் சீராக்கம் செய்யப்பட வேண்டும். | மதிப்பிற்குறிய ஆளுனரின் அங்கீகாரத்திற்காக கோரிக்கை விடப்பட்டுள்ளது. |
| (ஆ) | ரூபா 65,814 ஆன நிலுவை வாடகை தொகை அங்கீகாரமின்றி திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது. | சரியான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | சரியான நிலுவை மீதி பட்டியலை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவுகள் ரூபா 8,766,539 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 1,372,964 ஆனது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 7,857,000 | 11,015,758 | 3,720,238 | 24,838,169 | **8,880,000** | **11,556,050** | **6,178,196** | **22,363,307** |
| (ii) | வாடகை | 2,270,680 | 361,280 | 334,910 | 184,054 | **1,672,680** | **931,070** | **829,920** | **291,031** |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,552,000 | 2,181.345 | 2,181,345 | -- | **1,501,000** | **1,314,062** | **1,314,062** | -- |
| (iv) | ஏனைய வருமானம | 64,228,000 | 62,219,535 | 754,054 | 55,224,034 | **33,424,662** | **37,161,240** | **7,699,180** | **69,340,774** |
| | கூட்டுத் தொகை | 76,907,680 | 75,777,918 | 81,446,997 | 80,246,257 | **45,478,342** | **50,962,422** | **16,021,358** | **91,995,112** |

### 2.2.2 வீத வரி மற்றும் வரி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | வீதவரி | | |
| (i) | 2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலத்தினுள் வீதவரி வருமானம் சேகரிப்பின் போது, ஏற்பட்டிருந்த நிதி மோசடி வெளிப்படல், அந் நிதி மோசடி தொடர்பாக இன்னும் களத்திலிருந்து தகவல்கள் வெளிப்பட்டுக் கொண்டிருப்பதாக வருமான பரிசோதகர்கள் அறிவித்தல் மற்றும் ஆரம்ப மற்றும் இறுதி பரிசோதனைகளினூடாக ரூபா 1,028,451 ஆன வீத வரி நிலுவை மீதியொன்று அறவிட வேண்டிய வீத வரி மோசடி கணக்கு என மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருத்தல், கடந்த ஆண்டில் நிலவிய இம் மீதி தீர்க்கப்படாமை போன்ற காரணங்களினால் மீளாய்வாண்டு இறுதியில் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 24,838,169 ஆன நிலுவை வீத வரி மீதியின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது. | உரிய நடவடிக்கை எடுத்தல் மற்றும் நிலுவை மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரியான நிலுவை மீதிகளை இனங்காண எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அரச நிறுவனங்களிலிருந்து நீண்ட காலமாக அறவிட வேண்டியிருந்த ரூபா 248,184 ஆன வீதவரி அறவிடப்படவில்லை. | நிலுவை மீதிகளை அறவிட வேண்டும். | நிலுவையை அறவிட குறித்த நிறுவனங்களிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

**(ஆ)** ஏக்கர் வரி

| | | |
|---|---|---|
| ரூபா 245,796 ஆன நிலுவை ஏக்கர் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரியான மீதியை இனங்கண்டு எதிர் காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.3 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ)** முச்சக்கர வண்டி கட்டணம் | | |
| ரூபா 1,500,000 ஆன மதிப்பிடப்பட்ட முச்சக்கர வண்டி கட்டண வருமானத்திலிருந்து ரூபா 26,400 ஆன வருமானம் மாத்திரமே சேர்க்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வருமான பரிசோதகர்களின் வெற்றிடங்கள் காரணமாக, இந் நிலைமை ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) விளம்பர பலகை கட்டண வருமானம் | | |
| 25 விளம்பர பலகைகளிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 532,600 வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | விளம்பர பலகை வருமானம் அறவிடப்பட வேண்டும். | இவ்வாண்டு சீர் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.4 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 15,357,540 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 37,793,424 அறவிட வேண்டியிருந்தது. | பெற வேண்டிய கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒரு பகுதி கிடைத்துள்ளதுடன், மற்றைய தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ)** போதியளவு மேற்கொள்ளப்படாத வேலைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பெக்கோ வண்டியை வாடகைக்கு வழங்குவதன் மூலம் எதிர்பார்த்த ரூபா 500,000 வருமானம் ஈட்டப்பட்டிருக்கவில்லை. | மதிப்பிடப்பட்ட வருமானத்தை ஈட்டிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ii) | 2019 ஆண்டினுள் அங்கீகரிக்கப்பட்ட 202 கட்டிட விண்ணப்பங்களில் 140 விண்ணப்பங்கள் தொடர்பான நிர்மாணங்களின் புதிய நிலைமை பற்றிய பின்னூட்டல் விபரிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான பின்னூட்டல் செயல் முறையொன்று செயற்படுத்தப்பட வேண்டும். | விடய உத்தியோகத்தர் மற்றும கள உத்தியோகத்தர் அறிவூட்டப்பட்டுள்ளனர். |

**(ஆ)** நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் அதிகார எல்லையில் பொது மக்கள் சார்பாக பல்வேறுபட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படட் போதும், அவைகள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் எவ்வாறு இணங்குகின்றன என்பது தொடர்பாக மதிப்பிடல் மற்றும் பின்னூட்டல் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக பின்னூட்டல் மேற்கொள்ள வேண்டும். | இவ்விடயத்தை விடய உத்தியோகத்தர் ஒருவருக்கு முறையாக ஒப்படைத்து சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

3.2 மனித வள முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆளணி வெற்றிடங்களும் மிகையும் | | |
| மீளாய்வாண்டு இறுதி திகதியில் 15 ஊழியர் வெற்றிடங்களும் 01 ஊழியர் மிகையும் நிலவின. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆட்சேர்ப்பு இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன், அங்கீகாரம் கிடைத்தவுடன் ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

3.3 செயற்பாடு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டின் பின் ஏக்கர் வரி தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொள்ள மற்றும் பில்லிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு முன் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமான பரிசோதகர்கள் அறிவூட்டப்படடுள்ளனர். |
| (ஆ) | 1982 இலக்கம் 04 மற்றும் 1984 இலக்கம் 44 கொண்ட சட்டங்களினால் திருத்தப்பட்ட 1978 இலக்கம் 41 கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சட்டத்தின் பிரகாரம், இனங்காணப்பட்ட அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | முன் நடவடிக்கை எடுக்குமாறு விடய உத்தியோகத்தர் அறிவூட்டப்பட்டுள்ளார். |
| (இ) | **முச்சக்கர வண்டிக் கட்டணம்** | | |
| | மீளாய்வாண்டிற்காக முச்சக்கர வண்டி தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | வருமான பரிசோதகர்களின் வெற்றிடங்கள் காரணமாக, இந் நிலை ஏற்பட்டுள்ளதுடன், எதிர காலத்தில் சீர்செயய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | **ஆதனங்களை குத்தகை வழங்கல் தொடர்பான குறைபாடுகள்** | | |
| (i) | கெலிஓய பேருந்து தரிப்பிட பின் பகுதியில் சட்டிப் பானைக்கடையிலிருந்து மதிப்பீட்டறிக்கை பெறப்படாது மாதாந்த வாடகையொன்று அறவிடப்பட்டிருந்ததுடன், 2019 ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 84,800 வாடகை தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீடு செய்கை மற்றும் நிலுவை தொகை அறவிடப்பட வேண்டும். | உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள போக்குவரத்து சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | சபைக்கு சொந்தமான எல்பிடிய கந்த நூலக கட்டிடத்தில் அமைந்துள்ள 02 அறைகள் கிராம உத்தியோகத்தர் மற்றும் தபால் காரியாலத்தை நடாத்திச் செல்ல மதிப்பீட்டறிக்கை பெறப்படாது மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது வழங்கப்பட்டுள்ளன. | சரியாக சொத்துக்களை ஒப்படைக்க வேண்டும். | எதிர் காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) | அலபலாவ நூலக கட்டிடத்தில் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகம் மதிப்பீட்டறிக்கை பெறப்படாது மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. | சரியாக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். | எதிர் காலத்தில் உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | தெல்வெட்டிய சனசமூக நிலையம் - தேயிலை நாற்று மேடை 2013 ஆண்டு முதல் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது மற்றும் மதிப்பீட்டறிக்கை பெறப்படாது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கை கைச்சாத்திட மற்றும் நிலுவை தொகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை குத்தகை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்தக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 17,721,100 பெறுமதியான 10 வாகனங்கள் விளைவற்று நிலவின. | வாகனங்களை பழுதுபார்க்க அல்லது உரிய மாற்று நடவடிக்கைக்காக ஈடுபடுத்த வேண்டும். | 2019 வருடாந்த பண்டக கணிப்பீட்டினால் ஏலத்தில் விற்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

**3.4.2 வாகன பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி பிரகாரம், சபைக்கு சொந்தமான 09 வாகனங்களின் எரிபொருள் பாவனைப் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை | உரிய சுற்றறிக்கை பிரகாரம் எரிபொருள் பாவனை பரிசோதனை செய்யப்பட வேண்டும். | தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேலை அதிகாரி அறிவூட்டப்பட்டுள்ளார். |

**3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டிற்காக தொலைபேசி படிகள் கொடுப்பனவிற்காக பாதீட்டின் கீழ் ஏற்பாடு ஒதுக்கப்படாத போதும், வேறு செலவு விடயத்திலிருந்து அதற்காக ரூபா 205,076 செலவிடப்பட்டிருந்தது. | ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் கீழ் மாத்திரம் செலவிட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 தீர்க்கப்படாத அவதானங்கள் மற்றும் பதில் கிடைக்காத ஐயவினாக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 – 1.4 (இ) | | |
| | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) பிரகாரம், உரிய நடவடிக்கை எடுக்காது பெறுமதி ரூபா 450,826 ஆன 223 வைப்புக்கள் 29 வருட காலமாக பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுமதியை இனங்கண்டு வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2018 – 3.4.2 (அ) | | |
| | பெறுமதி ரூபா 374,501 ஆன 2235 வகை நீர் குழாய் உதிரிப் பாகங்கள் 10 வருடங்களை விஞ்சிய காலமாக பயன்பாட்டிற்கு எடுக்காது நீர் களஞ்சியத்தில் நிலவின. | சொத்துக்கள் விளைவற்றுப் போக இடமளிக்காது பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும். | ஒரு பகுதி ஏலத்தில் விற்கப்பட்டுள்ளதுடன், மீதிப் பகுதியை பயன்படுத்துகிறேன். |